**மன்னார் காற்றலை மின்சக்தி உருவாக்கல் செயற்திட்டம் - 2024**

---

மன்னார் காற்றலை மின்சக்தி உருவாக்கல் செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிகூற்றுக்கள் மீதான கணக்காய்வு செயற்திட்ட நிர்வாக கைநூலின் V (D) ஆம் பிரிவு மற்றும் இலங்கை மின்சார சபைக்கும் (CEB) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ADB) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 நவம்பர் 22 ஆம் திகதிய 3585- எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.02 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டக் கடன் உடனபடிக்கைகளின் பிரகாரம் இலங்கை மின்சாரசபை செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. காற்றலை மின்வலு உருவாக்கல் அதிகரித்தல், மீள்சுழற்சி மின்வலு முகாமைத்துவ முறைமை முன்னேற்றம், செயற்திட்ட பொறியியல் வடிவமைப்பு மீளாய்வு மற்றும் மேற்பார்வையில் கடன் பெறுபவரின் இயலளவை வலுப்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 33,702.09 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 216.70 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 24,883.87 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 160 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 8,818.22 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 56.70 மில்லியன் இலங்கை மின்சார சபையால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2018 பெப்ரவரி 22 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 யூன் 22 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2026 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காற்றலை மின்வலு பண்ணையின் 04 சேதமடைந்த கத்திகளின் மீளமைப்பில் இலங்கை மின்சார சபையால் ஏற்பட்ட ரூபா 1,024.23 மில்லியன் தொகை LKAS 16 இன் பிரகாரம் உரிய சொத்துக்களில் மூலதனமாக்குவதற்கு பதிலாக செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களில் ஏனைய கடன்பட்டோராக பதியப்பட்டிருந்துது. இதன் விளைவால் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துககள் அதே தொகயால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சொல்லப்பட்ட தொகை நிதிக் கூற்றுக்களில் சில்லறை கடன்பட்டோராக பதியப்பட்டிருந்தது. | LKAS கள் பினபற்றப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 324.48 மில்லியன் இருக்கின்ற மூலதனச் செலவினம் மற்றும் ரூபா 297.73 மில்லியன் ஒப்பந்தகாரர் மீதி என்பவற்றிற்காக பட்டியல்கள் மற்றும் ஆதாரமான ஆவணங்கள் போன்ற தகவல்கள் கணக்காய்வற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. ஆகவே, ரூபா 622.21 மில்லியன் தொகையான மீதிகள் கணக்காய்வில் மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | கருத்துரைகள் பெறப்பட்டிருக்கவில்லை | மீதிகளை மெய்மையாய்வு செய்வாற்கு உரிய பட்டியல்கள் மற்றும் ஆதாரமான ஆவணங்கள் சமர்ப்பிபதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளின் பரிந்துரை |
|---|---|---|
| கடன் உடன்படிக்கை பிரகாரம், (அ) அதிகரிக்கப்பட்ட காற்றலை மின்சார உருக்க இயலளவு, (ஆ) | இந்த நீடிப்பு சகல வழங்கக்கூடிய மற்றும் வெளியீடுகளை இறுதியாக்குவதற்கு செயற்திட்ட | செயற்திட்ட காலப் பகுதிக்குள் பிரச்சனைகளை |

| | | |
|---|---|---|
| முனனேற்றப்பட்ட முறைமை மீள்செயற்பாட்டு மின்வலு முகாமைத்தும், (இ) CEB இற்கு செயற்திட்ட பொறியியில் வடிவமைப்பு மீளாய்வு மற்றும் மேற்பார்வை ஆதரவு என்னு அமைக்கப்படும் 03 பிரதான வெளியீட்டை 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும் முறைமை மீள்செயற்பாட்டு மின்வலு முகாமைத்துத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்கள் முளாய்வாண்டு இறுதி வரையும் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும் மன்னார் காற்றலை மின்வலு செய்திட்டம் கட்டம் 1 இன் கீழ் 4 கத்திகள் மீள பொருத்துவதற்காக 2023 இல் சபையால் ஏற்பட்ட ரூபா 1,024.23 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 3.02 மில்லியன் கிரயத்தின் அறவீடு மற்றும் பிரதான EPC ஒப்பந்தகாரரால் ராடர் அடிப்படை பறவைகள் கண்டறிதல் முறைமை மீளப்பபொருத்தமை என்பவை தொடர்பில் எழுந்த தகராறு மீளாய்வாண்டு இறுதிவரையும் தீர்க்கப்படாதிருந்தது. | குழுவிற்கு தேவையான கால அட்டவணையை வழங்குகின்றது. இதன்படி சகல செயற்திட்ட நடவடிக்கைகளும் செற்திட்டதினுடைய குறிதப்பிட்ட நோக்கங்கள் அடையப்பட்டதை உறுதிப்படுத்தி திருத்தப்பட்ட கடன் முடிவுறுத்தல் திகதிக்கு முன்னர் முழுமையாக பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. | தீர்ப்பதற்கும் செயற் திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 நிதிகளின் குறைபயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐ.அ.டொலர் 160 மில்லியன் தொகையான கடனின் கீழ் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளில் ரூபா 31,509.26 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 151.84 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டு இறுதியளவில் ஐ.அ.டொலர் 8.16 மில்லியன் கைதவிர்க்க வேண்டியிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்ட ரூபா 2,757.30 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 8.91 மில்லியன் தொகையில் ரூபா 2,469.30 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 7.98 மில்லியன் CEB இன் வேறு பிரிவால் பரிமாற்ற வழி வலையமைப்பிற்கான பொருட்கள்/ உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ADB இன் ஒப்புதல் பெற்ற பின்னர் பயன்படுத்தப்பட்டிருந்தது. | நிதிகள் கைதவிர்ப்பு தொடர்பில் பிரச்சனைகள் அல்லது முறையீனங்கள் இருக்கவில்லை. | கடன் பெறுகைகளை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) கடன் தொகையின் ஒதுக்கீட்டின் பிரகாரம் ஐ.அ.டொலர் 12.40 மில்லியன் தொகை கடப்பாட்டு மற்றும் வட்டிக் கட்டணங்களிற்காக ஒதுக்கப் பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் சகல ஒதுக்கீடுகளும் பயன் படுத்தப்பட்டிருந்தது. அவற்றில் ஆண்டின் போது CEB ஆல் செய்யப்பட்ட ரூபா 3.08 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 200.03 மில்லியனிறிகு சமமான ஐ.அ.டொலர் 989,767.45 ஆன தொகை கடன் கைதவிர்ப்பில் தாமதம் காரணமாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடப்பாட்டு கட்டணங்களாக ஏற்பட்டிருந்தது. மேலும் கடப்பாட்டு கட்டணங்களின் ஒரு பகுதி சிக்கனமற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. எதிர்காலத்தில் கைதவிர்க்கப்படாத கடன் தொகைகளில் விதிக்கப்பட்ட கடப்பாட்டு கட்டணங்கள் CEB நிதிகளில் ஏற்படவேண்டி இருக்கும். ஆகவே, இது CEB இற்கு மேலதிக சுமையாக இருக்கும். | செயற்திட்ட பூர்த்தியாக்கலிலுள்ள தாமதங்கள் எதிர்பாராத பல்வேறு காரணங்களால் ஏற்பட்டது. செயற்திட்ட நீடிப்புகள் தகுதியான மற்றும் நியாயமான காரணங்களிற்காக மாத்திரம் வழங்கப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் மேலும் தாமதமில்லாமல் கடன் பெறுகைகளை பயனபடுத்தவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3..3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளின் பரிந்துரை |
|---|---|---|
| 2010 யூலை 2 ஆந் திகதிய ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் டொடர்பான உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் இலங்கை மின்சாரசபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் மேற்கொள்ளப்பட்டிருக்கவல்லை. | உள்ளக கணக்காய்வு கிளையில் உள்ள வளங்கள் குறைவாக உள்ளமையால் சகல செயற்திட்டங்களின் வருடாந்த கணக்காய்வுகள் சாத்திய மற்றிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |